புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# தனிப்பாடல்களில் புலவர்கள் ஓர் கண்ணோட்டம்

கா.வெண்ணிலா, உதவிப்பேராசிரியர்
விநாயகா மின்ஸ்
உடற்கல்வியியல் கல்லூரி,
சேலம்

## முன்னுரை:

உலக செம்மொழிகளுள் ஒன்றாக தமிழ்மொழி உள்ளது. இம்மொழியிலுள்ள நூல்கள் இலக்கணங்கள், இலக்கியங்கள் என இருவகைப்படுவன. இலக்கணங்கள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகைப்படும். இலக்கியங்கள் காலம் வடிவம், கருத்து முதலிய முறைகளால் வகை செய்யப்பட்டுள்ளன. அவை முறையே சங்க இலக்கியங்கள், ஐம்பெருங்காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், உரைநடை இலக்கியங்கள், புதுக்கவிதைகள் முதலியன சான்று ஆகும். இந்நூல்களில் காணப்படும் கருத்துக்கள் காலத்தை காட்டுவனவாகும். மனித வாழ்க்கைக்கு பல கருத்துக்களை எடுத்துச் சொல்லுவனவாக உள்ளன. நூலுக்குரிய வடிவம் இல்லாமல் பல புலவர்கள் பல சூழல்களில் பாடிய பாடல்களும் தமிழ் மொழியில் காணப்படுகின்றன. இவை நூல் வடிவம் பெறாமல் தனிநிலையில் இருந்து பல நல்ல கருத்துக்களை சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டும் தன்மையையும் காண முடிகிறது. இப்பாடல்கள் தனிப்பாடல்கள் என பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. தனிப்பாடல்களை இயற்றிய புலவர்களையும், தனிப்பாடல் பற்றிய அறிமுகத்தினையும் புலவர்களும் தனிப்பாடல்களும் ஒரு கண்ணோட்டம் என்னும் இவ்வியல் ஆய்வு செய்கிறது.

## தனிப்பாடல் - விளக்கம்:

தனிப்பாடல் என்பது பாடலின் கருத்து ஒரு பாடலோடு முற்றுப்பெற்றதாகவும், பாடல் நூலமைப்புக்கு ஏற்றவாறு இல்லாமலும் இருப்பது ஆகும். அதாவது ஒரு பாடல் எந்த நூல் அமைப்பிலும் இல்லாமல் தனித்து நின்று பொருள் முழுமைப்படத் தருவது தனிப்பாடல் எனப்படும்.

## புலவர்களும் தனிப்பாடல்களும்:

தனிப்பாடல்கள் பாடிய புலவர்கள் தம்முடைய வாழ்வியல் நிலை –அனுபவம் - சூழல் வெளிப்படத் தக்கவாறு பாடி உள்ளனர். இத்தனிப்பாடல் பாடிய புலவர்கள்,

1). பெயர் தெரிந்தவர்கள்
2). பெயர் அறிய இயலாதவர்கள்

எனப் பகுத்துக் கொள்ளப்படுகின்றனர்.

## பெயர் தெரிந்தவர்கள்:

தனிப்பாடல் பாடிய புலவர்களின் பலர் பல இலக்கியங்களை இயற்றியவர்கள் ஆவர். ஒரு சிலரே தனிப்பாடல் மட்டும் இயற்றியுள்ளனர்;. தனிப்பாடல் பாடியவர்களில் பெயர் தெரிந்தவர்கள்,

அ) ஆண்பாற் புலவர்கள்
ஆ) பெண்பாற் புலவர்கள்

என்று பகுக்கப்படுகின்றனர்.

*ஆண்பாற் புலவர்கள்:*

*இலக்கியங்களைப் படைக்கும் புலவர்களில் பெரும்பாலும் ஆண்பாற் புலவர்கள் உள்ளனர். அவர்களுள் தனிப்பாடல்களை பலர் இயற்றியிருக்கின்றனர். தனிப்பாடல் இயற்றிய ஆண்பாற் புலவர்கள்,*

*இல்லற நிலைப் புலவர்கள்*
*துறவு நிலைப் புலவர்கள்*

*எனப் பிரிக்கப்படுகின்றனர்.*

*இல்லற நிலைப் புலவர்கள்:*

*இல்லற நிலைப் புலவர்கள் தன் மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்காக, இலக்கியங்கள் இயற்றுவதையோ அல்லது அரசர்களைப் பாடிப் பரிசில் பெறுவதையோ மேற்கொள்கின்றனர். சிலர் தங்கள் புகழைப் பரப்பவும் பாடல்கள் இயற்றுவதுண்டு. இல்லற நிலையில் தனிப்பாடல்கள் இயற்றிய புலவர்கள் வரிசையில்,*

1) *அந்தகக்கவி வீரராகவ முதலியார்*
2) *கம்பர்*
3) *காளமேகப் புலவர்*
4) *திருவள்ளுவர்*

*ஆகியோர் அடங்குவர்.*

*1.அந்தகக்கவி வீரராகவ முதலியார்:*

*சோழ நாட்டில் நீர்வளம் நிலவளம் மிக்க களத்தூhர் என்னும் ஊரில் சைவ வேளாளர் மரபில் வடுகநாத முதலியாருக்கு மகனாய்ப் பிறந்தவர் அந்தகக் கவி ஆவார். இளமையிலேயே இவர் கல்வியில் சிறந்தவராக விளங்கினார். ஆசுகவி, மதுரகவி, வித்தாரகவி, சித்தரகவி என்னும் நால்வகைக் கவிகளை எளிமையாகப் பாடுவதில் திறமை வாய்ந்தவர் ஆவார்.*

*வெளிநாட்டுப் பயணம் சென்று ஒரு நாள் இவர் திரும்பி வருவதைக் கண்ட ஒருவன், அவரது மனைவியிடம் சொல்ல அது கேட்ட அந்தகரின் மனைவி ஏளானமாக, முதலியார் யானைக் கன்றும் வளநாடும் பொற்குவியலும் கொண்டு வருகிறாரோ? என்று கூறினார். அச்சொல் அந்தகரை மிகவும் புண்படுத்தியது. அந்நாளே மீண்டும் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார். பல நாடுகளுக்குச் சென்று பல அரசர்களையும் வள்ளல்களையும் பாடிப் பரிசு பெற்றாhர். இவர் பல நூல்களும், சில தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார்.*

*2. கம்பர்:*

*சோழ மண்டலத்தில் உள்ள திருவழுந்தூரில் பிறந்தவர் கம்பர். இவர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பட்டவர் ஆவார். வள்ளலின் ஆதரவால் கல்வியில் சிறந்தவராக விளங்கினார். இவரைத் தமிழ்ச் சக்கரவர்த்தி என்று சிறப்பாக அழைப்பர். சடையப்ப வள்ளலின் வேண்டுகோளை ஏற்று வடமொழியில் வான்மீகி எழுதிய இராமாயணத்தைத் தமிழ் மொழியில் தமிழ்க் கலாச்சாரத்திற்கு ஏற்ப மொழிப் பெயர்த்து இயற்றியுள்ளார். இந்நூலுக்கு இராமவதாரம் எனப் பெயரிட்டார். இராமவதாரம் அநபாய சோழனின் அவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.*

*கம்பர் உவச்சர் குலத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவரது தந்தை ஆதித்தன் கம்பர் இயற்றிய கம்ப இராமாயணத்தின் சிறப்பை,*

*கம்ப நாடன் கவிதையிற் போல்*
*கற்றோர்க்கு இதயங் களியாதே(6)*

*என்னும் பாடலடிகளால் அறியமுடியும். இத்தகைய சிறப்புகள் வாய்ந்த கம்பர் சில தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார்.*

*3. காளமேகப் புலவர்:*

*கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நந்திக் கிராமத்தில் பிறந்தவர் காளமேகப் புலவர் ஆவார். இவரது இயற்பெயர் வரதன். இவர் திருவரங்கம் கோயில் மடப்பள்ளியில் பணிபுரிந்தார். வைணவ சமயத்தைச் சேர்ந்த இவர் சைவத்திற்கு மாறினார். திருவரங்கம் கோயிலில் பணிபுரிந்த*

இவர், திருவானைக்காவில் சிவலாயத்தொண்டு செய்யும் தாசியிடம் அன்பு வைத்திருந்தார். கோயிலின் உட்பிரகாரத்தில் தாசியின் வரவை எதிர்பார்த்து ஒரு நாள் இரவு காத்திருந்தார். சிறிது நேரத்தில் அவருக்கு தூக்கம் வர, அங்கேயே படுத்து உறங்கினார். பின் தாசி வந்து கோயிலில் இவரைத் தேடிப்பார்த்துக் காணாமையால் திரும்பச் சென்றாள். பின்னர் கோயிலும் திருக் காப்பிட்பட்டது. கோயிலின் உள்ளிருந்த புலவர் சரசுவதிதேவி அருளால் எல்லாக் கலைகளும் வரப்பெற்றார். பண்டிதனாகிச் சூல் கொண்ட காளமேகம் போலத் தமிழ் கவிமாரி பெய்தமையால் காளமேகம் என அழைக்கப்பட்டார்.

தனிப்பாடல் இயற்றுவதில் மிக்க பெருமைப் பெற்றவர் இவரே ஆவார். இவர் இயற்றியுள்ள தனிப்பாடல் புதிய உத்தி முறைகளைக் கொண்டனவாக உள்ளன. "தில்லையம்பூர்ச் சந்திர சேகரக் கவிராச பண்டிதர்,காளமேகம் பாடல்களுக்காகவே தனிப்பாடல் தொகுத்தாரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது"(7) எனவும் "புலவர் பெருமான் தமிழுலகமெங்கனும் பிரசித்தி அடைந்து புண்ணியத் தலங்கள் தோறும் சென்று தெய்வதரிசனம் செய்து பற்பல புதுமைக் கவிதைகள் பாடியுள்ளது போன்றாப் புகழ் படைத்ததாகும்"(8) எனவும் கூறுவதன் வழி காளமேகப் புலவரின் சிறப்பை நம்மால் உறுதி செய்ய முடிகிறது.

4. திருவள்ளுவர்:

தமிழ் மொழியில் உள்ள நீதி இலக்கியங்களில் முதன்மையானதும், சிறப்புப் பெற்றதாகவும் விளங்கும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். இவரது பெற்றோர் பகவன் மற்றும் ஆதி என்னும் புலைச்சி ஆவர். இவரது சகோதரர்கள் இடைக்காடர் மற்றும் கபிலர், சகோதரிகள் ஔவை, உப்பை, உறுவை, வள்ளி ஆகியோர் ஆவர். இவரது மனைவி வாசுகி என்னும் கற்புடையவள் ஆவாள். வள்ளுவர் நெசவுத் தொழிலை மேற்கொண்டவர் ஆவார்.

இவர் இயற்றிய நூலான திருக்குறள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருவள்ளுவருடைய மாணவர் ஏலேல சிங்கர் ஆவார். வள்ளுவர் உலகப் புகழ்பெற்ற திருக்குறள் மட்டுமல்லாது சில தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

துறவு நிலைப் புலவர்கள்:

துறவு வாழ்க்கையை மேற்கொண்ட புலவர்களும் இலக்கியங்களும், தனிப்பாடல்களும் இயற்றியுள்ளனர். துறவு நிலையில் தனிப்பாடல் இயற்றிய புலவர்கள் வரிசையில்,

1. இரட்டைப் புலவர் 2. ஒட்டக்கூத்தர் 3. ஒப்பிலாமணிப்புலவர்
போன்றோர் அடங்குவர்.

1.இரட்டைப் புலவர்:

இரட்டைப் புலவர்கள் என்போர் ஒருதாய் வயிற்றில் பிறந்த இரட்டைப் பிள்ளைகள் ஆவர். இவர்களுள் மூத்தவர் முடவர், இளையவர் குருடர் ஆவர். இவர்கள் காஞ்சிபுரத்தில் பிறந்து, கல்வி கற்று, ஊர்கள் தோறும் உலாவி, கவிபாடிப் பெரும்புகழ் பெற்றவர்கள் ஆவர்.வெளியில் செல்லும் போது முடவரை, குருடர் தோள்மேற் தூக்கிச் செல்வாh். இவர்கள் இயற்கையிலேயே கவிபாடும் திறமை பெற்றிருந்தனர். இளையவர் முதல் இரு அடிகளைப் பாட மூத்தவர் பின் இரண்டு அடிகளைப் பாடுவது வழக்கம். ஒருவர் பெயர் முதுசூரியனர், மற்றவர் இளஞ்சூரியர். இவர்கள் பல நூல்களை இயற்றியுள்ளனர். பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளனர்.

2.ஒட்டக்கூத்தர்:

செங்குந்த மரபில் பிறந்தவர் ஒட்டக்கூத்தர் ஆவார். காங்கேய முதலியார் என்பவர் இவரை ஆதரித்துப் போற்றிக் கல்வியில் வல்லவராக்கி, கவுடப் புலவன், கவிராட்சசன் என்றெல்லாம் பெயரிட்டனர். விக்கிரம சோழன் முதலிய மூவர்க்கு சிறந்த கவிச் சக்கரவர்த்தியாக விளங்கியவர் ஆவார். விக்கிரம சோழன் இறந்ததும் அவரது குமாரன் குலோத்துங்கனுக்கும், குலோத்துங்கனுக்குப் பின் அவனது மகன் இராசராச சோழனுக்கும் சிறந்த பெருந்துணையாய் இருந்தார். இவர் இயற்றிய நூல்களில் உள்ள பாடல்களை ஒட்டப்பாடி இயற்றியதால், ஒட்டக்கூத்தர் என்னும் பெயர் பெற்றார். இவர் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார்.

*3. ஒப்பிலாமணிப்புலவர்:*

*தொண்டை நாட்டில் அவதரித்தவர் ஒப்பிலாமணிப் புலவர் ஆவார். இவர் கொடை வள்ளல்களில் ஒருவரான குமணனைச் சிறப்பித்துப் பாடச் சென்று, அங்கு இல்லாமையால் அமணனை நோக்க, அவர் என் தமையன் தலையைக் கொண்டு வந்து கொடுத்தால் வேண்டியது தருவேன் எனக் கூறினான். அதைக் கேட்டு காட்டிற்குச் சென்று அரசைத் தன் தம்பியிடம் கொடுத்து விட்டு, வேடனைப் போல் காலம் கழித்து வரும் குமணனை சில அடையாளங்களின் மூலம் அறிந்தார். குமணனை நோக்கி,*

*"மாந்தையி லேவாழும் மகுடத்தி யாகியுனக்கு*
*ஏந்து தழும்போ இரண்டுளதே – வேந்தர்*
*முடித்தழும்பு உன் காலிலே முத்தமிழோர்க்கு ஈயும்*
*படித்தழும்பு உன் கையிலே பார்".(10)*

*என்ற பாடல் பாடி தன்னிடம் வந்து கேட்பவர்க்கு கொடுத்துதவி தழும்பேறிய கையாலும், காலில் உள்ள தழும்பாலும் உன்னை அடையாளம் கண்டு கொண்டேன் என்பதை அறிவித்தார். அத்துடன் அவரது தம்பி அமணன் விரும்பியதையும் கூறினார். அதைக் கேட்ட குமணன், என் தம்பி விரும்பியது என் தலை. நீர் நான் அரசு செய்கையில் வரவில்லை. இப்போது வந்தீர். உன் வறுமையில் நான் போக்குகிறேன் எனக் கூறினார். என் தலையைக் கொடுத்து ஆயிரம் பொன் விலை பெற்றுக் கொள் எனக் கூறி உடைவாளை எடுத்தார், புலவர் அதனை தடுத்தார். பின் புலவர் சிற்பி ஒருவரைச் சந்தித்து தன் எண்ணத்தை அவரிடம் தெரிவித்தார்.*

*முடிவுரை:*

*தனிப்பாடல்களை இயற்றிய புலவர்களையும், தனிப்பாடல் பற்றிய அறிமுகத்தினையும் தனிப்பாடல்களில் புலவர்களையும் பற்றியும் இக்கட்டுரை பேசுகிறது.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********